## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.37/2023

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 14.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லெட்சுமிபிரபா | ஜாதி | : | |
| த/பெயர் | : | கணேசன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து எனக்கு சொந்தமானதாகும். அந்த இடத்தில் நான் வேலி வைக்க சென்றபோது பிரதிவாதி பிரச்சனை செய்தார். அதனால் இந்த வழக்கை தா்ககல் செய்துள்ளேன். தாவா சொத்தை 30.10.2000 வருடம் எனது கணவர் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1440 சதுரடி ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லையின் திசை சரியாக தெரியவில்லை. தாவா சொத்தின் ஒரு பக்கம் எனது மாமியாருக்கு சொந்தமான இடம் உள்ளது . மற்றொரு பக்கம் வீரையன் மனை உள்ளது. மற்ற நபர்களின் பெயர் எனக்கு தெரியவில்லை.

பிரதிவாதியை எனக்கு தெரியும். எனது பிளாட்டிற்கு பக்கத்தில் பிரதிவாதி இருந்து வருகிறார். பிரதிவாதி தகர சீட்டு போட்ட வீட்டில் இருக்கிறார். பிரதிவாதி அவரது வீட்டிற்கு செல்வதற்கு பாதை எங்கு உள்ளது என்றால் எனது வீட்டிற்கு செல்லும் பாதையில் செல்வது கிடையாது. வேறு பாதை உள்ளது.

பிரதிவாதி வீட்டிற்கு பக்கத்தில் வாய்கால் உள்ளதால் அந்த வழியாக செல்லமுடீயாது என்பதை மறைப்பதற்காக நான்கெல்லை தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள நான்கெல்லை விபரத்தை 20 அடி

ரோட்டிற்கு மேற்கு, வடக்கால் வாய்காலுக்கு கிழக்கு, மனை எண்.44 க்கு வடக்கு, வடிகால் வாய்க்காலுக்கு தெற்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான்.

தாவா இடத்திற்கு நான் அடிக்கடி சென்று வருவேன். ஆனால் கடந்த 5 வருடங்களாக செல்ல முடியவில்லை. கடைசியாக 2023 ல் வேலி வைப்பதற்காக சென்றேன். பிரதிவாதி பிரச்சனை செய்ததால் அந்த இடத்தில வேலி போட முடியவில்லை. வழக்குரையில் 17.02.2023 ல் பிரதிவாதி வேலியை அப்புறப்படுத்த முயற்சி செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதற்கு முன்னதாகவே பிரதிவாதி வேலியை அகற்றிவிட்டார்.

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி 12 ஆண்டுகளாக எனது வீட்டு வழியாக தான் சென்று வருகிறார்கள் என்றாலும் அவற்றை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எனது இடத்தில் வீடு கட்டி குடியிருக்கவில்லை. அரசு புறம்போக்கு நிலததில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். எனக்கு சொந்தமாக இடத்தில் வேலி வைக்க விடாமல் அவர் பிரச்சனை செய்து வருகிறார். சர்வேயர் 17.02.2023-ல் அளந்து எனது அனுபவத்தை உறுதிபடுத்தி சான்று வழங்கியுள்ளார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(பிரதிவாதி தரப்பில் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.18 18:12:49 +0530

District Munsif

Mannargudi.